செ.வெ.எண்.253 நாள்: 17.10.2019

**மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தீவிர துப்புரவுப் பணி மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணியை மாநகராட்சி ஆணையாளர் திரு.ச.விசாகன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.டி.ஜி.வினய், இ.ஆ.ப. அவர்கள் துவக்கி வைத்தார்.**

மதுரை மாநகராட்சி மண்டலம் எண்.2 க்கு உட்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தீவிர துப்புரவுப் பணி மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணியினை ஆணையாளர் திரு.ச.விசாகன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.டி.ஜி.வினய், இ.ஆ.ப. அவர்கள் இன்று (17.10.2019) துவக்கி வைத்து தெரிவித்தாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்து அலுவலகங்கள். குடியிருப்புகள், வணிக வளாகங்கள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் மற்றும் பொதுமக்கள் அதிகளவில் கூடும் பொதுஇடங்கள் ஆகிய அனைத்து பகுதிகளிலும் கொசு உற்பத்தி ஆக கூடிய இடங்களை கண்டறிந்து அந்த இடங்களில் சுத்தப்படுத்தும் பணி நடைபெறுகிறது. மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலங்களிலும் அந்தந்த அலுவலர்கள் தலைமையில் பணியாளர்களை கொண்டு தீவிர துப்புரவுப்பணி இன்று மேற்கொள்ளப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு டெங்கு காய்ச்சல் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது.

மதுரை மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் 2017 ஆம் ஆண்டு அதிகளவில் இருந்தது தற்போது 2019 ஆம் ஆண்டு கட்டுப்படுத்தப்பட்டு இதுவரை 29 நபர்களுக்கு மட்டுமே டெங்கு காய்ச்சல் இருந்தது இதுவும் ஒரே பகுதியில் அல்லாமல் பல்வேறு பகுதிகளில் கலந்து காணப்பட்டது. டெங்கு காய்ச்சலுக்காக மருத்துவ உதவிகள் வழங்குவதற்கு அரசு மருத்துவமனைகள் மற்றும் அனைத்து ஆரம்ப சுகாதார மையங்களில் படுக்கை வசதி மற்றும் கொசு வலைகளுடன் 24 மணி நேரமும் தயார் நிலையில் உள்ளன. தமிழக அரசு ஆணைப்படி அனைத்து அங்கன்வாடி மையங்கள், பள்ளிக் கூடங்களில் நிலவேம்பு கசாயம் வழங்கப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு டெங்கு காய்ச்சல் தடுப்பது குறித்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. பள்ளி மாணவர்களை தூய்மை தூதுவர்களாக நியமிக்க அறிவுரை வழங்கப்பட்டு அவர்களுக்கு பயிற்சி வழங்கி மாணவர்களின்

பள்ளிகள், வீடுகள், தங்களின் தெருக்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், கொசு உற்பத்தியாகும் காரணிகளை கண்டறிந்து அதனை அழிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. டெங்கு காய்ச்சல் குறித்து கடந்த இரண்டு ஆண்டுகளாக விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டுள்ளது விழிப்புணர்வையும் மீறி டெங்கு கொசு உற்பத்தியாவது கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு விதிகளின்படி அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது.

வடகிழக்கு பருவமழை தொடங்கி உள்ளதால் பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் மழைநீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்து துறைகள் மூலமும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மழைக்காலத்தில் தண்ணீர் மற்றும் கழிவுநீர் செல்லும் சிறுபாலங்களில் அடைப்பு ஏற்பட்டு வெள்ளம் ஏற்படாதவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் மழைநீர் தங்கு தடையின்றி செல்வதற்கு அனைத்து மழைநீர் வடிகால்களும், வரத்து வாய்க்கால்களும் சுத்தப்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் வெள்ளம் பாதித்த இடங்களாக கண்டறியப்பட்ட 29 இடங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வெள்ள நிவாரண முகாம்களான பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள் உள்ளிட்ட பகுதிகளில் குடிநீர், கழிப்பறை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு தயார் நிலையில் வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார்.

அதனைத் தொடர்ந்து மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை வளாகம், மாநகராட்சி சுற்றுச்சூழல் பூங்கா ஆகிய பகுதிகளில் நடைபெற்ற டெங்கு தடுப்புப் பணிகளை ஆணையாளர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையாளர் திரு.ச.விசாகன், இ.ஆ.ப. மாவட்ட வருவாய் அலுவலர் திரு.செல்வராஜ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ராஜசேகர், நகர்நல அலுவலர் (பொ) மரு.வினோத்ராஜா, மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சித்திரவேல், சுகாதார அலுவலர் திரு.ராஜ கண்ணன், உட்பட மாநகராட்சி அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலர்கள்,டெங்கு ஒழிப்பு பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செ.ம.தொ.அ மதுரை மாநகராட்சி